பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 10 | திங்கட்கிழமை | 25.11.2024 | அதிர்வு 115

## வெள்ள அனர்த்தத்தை எதிர்கொள்வதற்கான முக்கிய அறிவுறுத்தல்கள்

**யாழ். மாவட்ட செயலகம் வெளியீடு**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்துக்கு முகம் கொடுத்தல் தொடர்பாக மாவட்ட அரச அதிபரால் 05



# மாவீரர்களை நினைவேந்த எந்தவித தடையும் இல்லை

## அதில் பங்கேற்பவர்களைப் படம் எடுக்காதீர்கள் என்று பாதுகாப்புத் தரப்பினருக்கு அநுர அரசு அறிவுறுத்தல்



"தமிழ் மக்கள் மாவீரர் வாரத்தை அனுஷ்டிப்பதற்கு எந்தவித தடையும் கிடையாது. அவர்கள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த முடியும். நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்பவர்களை ஒளிப்படம் எடுக்க வேண்டாம் எனப் பாதுகாப்புத் தரப்பினருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது."

- இவ்வாறு அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அரசு தெரிவித்துள்ளது. 05



# பேச்சு நடத்தத் தயார்

## தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குக் கஜேந்திரகுமார் அழைப்பு

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத் திட்ட முன்மொழிவை அடிப்படையாக வைத்து ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"நாடாளுமன்றத் தேர்தல் 05






'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்றதாம்' என்பார்கள்.

அதேபோல 'கூவையைப் பார்த்து பல் இளித்ததாம் ஆந்தை' என்றும் கூறுவார்கள்.

அப்படி இருக்கின்றது தங்களுடைய கூட்டுக் கட்சி குறித்து ரெலோவின் பிரமுகர் ஒருவர் தெரிவித்த கருத்து.

"மக்களிடத்தில் ஆதரவு அற்ற கட்சிகளை ஒன்றிணைத்துக் கொண்டு நாங்கள் தொடர்ந்தும் பயணிப்பதா? அல்லது தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) இனி வருகின்ற தேர்தலில் தனித்து போட்டியிடுவதா? – என்பது குறித்து கட்சியின் உறுப்பினர்களுடன் ஆலோசனை மேற்கொள்ள வேண்டியுள்ளது" என மன்னார் மாவட்ட ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளருமான டானியல் வசந்தன் தெரிவித்திருக்கின்றார்.

அவரது கருத்து சிரிப்பை தான் வரவழைக்கிறது. ஏதோ அவர்களினது ஐந்து 05



# மக்கள் ஆதரவற்ற கட்சிகளைச் சேர்த்துக் கொண்டு இனியும் பயணிப்பதா என்று வினவுகின்றது ரெலோ!





(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மக்களிடத்தில் ஆதரவு அற்ற கட்சிகளை ஒன்றிணைத்து கொண்டு நாங்கள் தொடர்ந்தும் பயணிப்பதா? அல்லது தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) இனி வருகின்ற தேர்தலில் தனித்து போட்டியிடுவதா? – என்பது குறித்து கட்சியின் உறுப்பினர்களுடன் ஆலோசனை மேற்கொள்ள வேண்டியுள்ளது என மன்னார் மாவட்ட ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளருமான டானியல் வசந்தன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் ரெலோ கட்சிக்காக பல்வேறு வகையிலும் உதவி புரிந்த கட்சியின் உறுப்பினர்களுடன் சந்திப்பும் மற்றும் நன்றி தெரிவிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

இதன் போது தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே டானியல் வசந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது கட்சியின் தலைமைத்துவத்திற்கு எவ்வித பாதிப்புகளும் இன்றி மீண்டும் நாடாளுமன்றம் அனுப்ப பல வழிகளிலும் உதவி புரிந்த தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சியின் மன்னார் மாவட்ட உறுப்பினர்களுக்கு தலைவர் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் போட்டியிட்டன. அந்த 5 கட்சிகளில் 4 கட்சி வேட்பாளர்கள் தோல்வியடைந்தனர். தமிழீழ விடுதலை இயக்கம் மட்டும் இத்தேர்தலில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைப் பெற்றுக் கொண்டுள்ளது.

மக்களிடத்தில் ஆதரவு அற்ற கட்சிகளை ஒன்றிணைத்துக் கொண்டு நாங்கள் பயணிப்பதா? அல்லது தமிழீழ விடுதலை இயக்கம் இனி வருகின்ற தேர்தலில் தனித்து போட்டியிடுவதா? – என்பன போன்ற விடயங்கள் குறித்து ஆலோசனைகளை உங்களிடம் முன் வைக்கின்றோம்.

நாங்கள் எதை நினைத்தாலும் மக்கள் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளனர். ஐந்து கட்சிகளை ஒன்றிணைத்து பலத்துடன் போட்டியிடுகின்றோம் என நாங்கள் நினைத்துக் கொண்டு இருக்கின்றோம்.

மக்கள் எமது கூட்டிற்கு ஆதரவு வழங்குவார்கள், நாங்கள்தான் ஒற்றுமையாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம், ஐந்து போராட்ட குழுக்கள் ஒன்றாக நிற்கின்றோம், நாங்கள் கடந்த காலங்களில் மக்களுக்காக ஆயுதம் ஏந்தி போராடியவர்கள், எனவே எங்களுக்குத்தான் மக்களின் ஆதரவு இருக்கிறது என்று நாங்கள் எண்ணி இருந்தோம்.

அந்த எண்ணத்தில் மண்ணை போடுவது போல இலங்கை தமிழரசு கட்சி எவ்வாறு எம்மை விட்டு வெளியே சென்றார்களோ அவர்கள் நினைத்தது நடந்து விட்டது.

நாங்கள் தவறானவர்களாகவும், அவர்கள் சரியானவர்களாகவும் காண்பித்து இத்தேர்தலில் வடக்கு கிழக்கில் அவர்கள் 8 ஆசனத்தை பெற்றுள்ளனர்.

உண்மையில் இது எமது அரசியல் இருப்பிற்கு ஒரு கேள்விக்குறியாகி உள்ளது. எனவே இனி வருகின்ற தேர்தல்களில் நாங்கள் தோற்போமாக இருந்தால் எமது கட்சியின் நிலை கேள்விக்குறியாகிவிடும்.

கடந்த காலங்களில் தமிழீழ விடுதலை இயக்கம் போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்றுள்ளது. எனவே உங்களின் ஒத்துழைப்பை நாங்கள் தொடர்ந்தும் எதிர் பார்க்கிறோம். எமது கட்சியின் உறுப்பினர்களை நம்பியே நாங்கள் அரசியலை முன்னெடுக்க உள்ளோம். – என அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இத்தேர்தலில் தனது வெற்றிக்காக பாடுபட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றிகளை தெரிவித்தமையோடு, கட்சி எதிர் காலத்தில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடினர்.



# இன்று முதல் 3 நாள்களுக்கு எம்.பிக்களுக்கு செயலமர்வு

இன்று முதல் 3 நாள்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட செயலமர்வு நடைபெறவுள்ளது.

இந்த செயலமர்வு காலை 9.30 முதல் மாலை 4.30 வரை நடைபெறவுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

இந்த செயலமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வகிபாகம், நாடாளுமன்ற சிறப்புரிமைகள், நாடாளுமன்றத்தின் சட்டவாக்க செயற்பாடுகள், நாடாளுமன்ற குழு முறைமை, நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகள், அரசமைப்பின் ஏற்பாடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளன.

# அரசாங்கத்திற்கு எதிராக மீனவர்கள் போராட வேண்டிய நிலை ஏற்படும்!

## நா.வர்ணகுலசிங்கம் தெரிவிப்பு




கடந்த கால அரசாங்கத்தைப் போல் நடக்குமேயானால் இந்த அரசாங்கத்திற்கு எதிராக போராட வேண்டிய நிலைக்குள் மீனவர்கள் தள்ளப்படுவார்கள்."

– இவ்வாறு வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்களின் சமாசத்தின் உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று (24) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நேற்றைய தினம் நீரியல்வளத் துறை அமைச்சரை சந்தித்து கலந்துரையாடியுள்ளோம். இதன் போது மீன்பிடி நீரியல் வளம் தொடர்பாக ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களை அமுல்ப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளோம்.

அத்தோடு நாட்டில் பல திணைக்களங்கள், அரசில்வாதிகள் சம்பந்தமான ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வடக்கில் நீரியல் வளத்துறை சார்ந்து அரச அதிகாரிகள், முன்னாள் அமைச்சர்கள் பல முறைகேடான செயற்பாடுகள் மோசடிகளில் ஈடுபட்டுள்ளமை தெரிந்த விடயமே. ஏன் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

இங்குள்ள சங்கங்கள், சமாசங்கள் மற்றும் சம்மேளனங்களில் முன்னாள் அமைச்சர் நியமித்த தலைவர்கள், நிர்வாகத்தினரே செயற்படுகின்றனர்.

உடனடியாக புதிய நிர்வாகத் தெரிவு ஜனநாய ரீதியாக செயற்பட இடமளிக்க ஆவன செய்ய வேண்டும் இப்போதுள்ள புதிய அமைச்சர்.

இந்திய மீனர்களது எல்லை தாண்டிய மீன்பிடியை ஒட்டிய கைது நடவடிக்கை இடம்பெறும் போது இந்திய மீனவர்கள் – தொப்புள் கொடி உறவுகள் – கடற்படையினர் மீது சுடு தண்ணீர் கொண்டும் மிளகாய்த் தூள் சரைசலை விசிறியும் தாக்குதல் நடத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இதனை வன்மையாக கண்டிக்கிறோம்.

உள்ளூர் இழுவைப் படகுகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போது தான் இந்திய மீனவர்களது இழுவைமடித் தொழிலை கட்டுப்படுத்த முடியும்.

இந்த அரசும் கடந்த கால அரசாங்கத்தைப் போல் நடக்குமேயான்லா இந்த அரசாங்கத்திற்கு எதிராகப் போராட வேண்டிய நிலைக்குள் மீனவர்கள் தள்ளப்படுவார்கள் என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம்."– என்றார்.

# நீர்கொழும்பில் படகு கவிழ்ந்ததில் தந்தை, மகளை காணவில்லை

நீர்கொழும்பு முன்னக்கரை களப்பில் சவாரியில் ஈடுபட்டிருந்த படகு கவிழ்ந்ததில் இருவர் காணாமல் போயுள்ளனர்.

முன்னக்கரை களப்பை பார்வையிடுவதற்காக 7 பேர் கொண்ட குழு நேற்று சென்றது.

அவர்கள் படகில் பயணித்துக்கொண்டிருந்த போது முன்னக்கரை மோட பாலத்திற்கு அருகில் படகு கவிழ்ந்துள்ளது.

பிரதேச மக்களால் ஐவர் காப்பாற்றப்பட்டுள்ளனர். எனினும் இதுவரையில் 02 பேர் கண்டுபிடிக்கப்படவில்லை.

50 வயதுடைய தந்தையும் அவரது 19 வயதுடைய மகளுமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# இன்று ஆரம்பமாகும் உயர்தரப் பரீட்சை




2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று இடம்பெறவுள்ளது.

பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த பரீட்சை அடுத்த மாதம் 20 ஆம் திகதி வரை 2 ஆயிரத்து 312 பரீட்சை மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளது.

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு மூன்று லட்சத்து 33,185 பரீட்ச்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

அவர்களில் 253,390 பாடசாலை பரீட்சார்த்திகளும் 79,793 தனியார் பரீட்சார்த்திகளும் அடங்குவதாகப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் எம். ஜீவராணி புனிதா தெரிவித்தார்.

இந்தநிலையில், பரீட்சார்த்திகள் 30 நிமிடங்களுக்கு முன்னதாக பரீட்சை மண்டபத்திற்குப் பிரவேசிக்குமாறு அவர் கோரியுள்ளார்.

# சட்டவிரோதமாக சிகரெட்களுடன் சந்தேகநபரொருவர் கைது



டுபாயிலிருந்து சட்டவிரோதமாக சிகரெட்களை கொண்டுவந்த சந்தேகநபரொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் விமான நிலைய அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 59,980 சிகரெட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொட்டாவை பகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

# மாகாண பேரவைச் செயலகத்தின் செயலராக ஜெகு நேற்று நியமனம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராகப் பணியாற்றிய ம.ஜெகு வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தின் செயலாளராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட சுகாதாரத் தொழிலாளி ஒருவர் தொடர்பாக எழுந்த நிர்வாக முரண்பாட்டின் காரணமாக வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்த ம.ஜெகுவை அப்பதவியில் இருந்து நீக்கிய ஆளுநர், ஜெகுவை இப்போது பேரவைச் செயலகத்தின் செயலாளராக நியமனம் செய்துள்ளார்.

இதேநேரம் பேரவைச் செயலகத்தின் செயலாளர் ஆ.சிறி விவசாய அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# தொல்பொருள் அகழ்வில் ஈடுபட்ட 11 பேர் கைது

வெலிகந்த – மட்டக்களப்பு வீதியின் நாமல் பொக்குண பகுதியில் தொல் பொருள் அகழ்வில் ஈடுபட்ட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இராணுவ உறுப்பி னர்கள் இருவரும் இராணுவத்திலிருந்து விலகிய ஒருவரும் அடங்குகின்றனர்.

சந்தேகபர்களிடமிருந்து 2 இரா ணுவ சீருடைகளும் அகழ்விற்காக பயன்படுத்திய பொருள்களும் கைப் பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சிக் கூட்டணியில் தங்கள் கட்சிக்கு மாத்திரம் தான் மக்கள் மத்தியில் பேரா தரவு இருக்கின்ற மாதிரியும், மற்றைய நான்கு கட்சிகளும் செல்லாக்காசு என்ற கருத்திலும் இருக்கிறது அவரது அந்தத் திமிரப் பேச்சு.

அவரது ரெலோ கட்சி இம்முறை மன்னாரில் மட்டும்தான பிழைத்தது. அது கூடத் தப்பி தவறித்தான்.

இலங்கையில் மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 196 நாடாளுமன்ற உறுப் பினர்களில் ஆக குறைந்த விருப்பு வாக்குகளில் கிட்டிய ஆசனம் மட்டுமே ரெலோவுக்குரியது.

மூன்று லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்களைக் கொண்ட வன்னி மாவட்டத்தில் ஆக 5,690 விருப்பு வாக்குகளோடு நாடாளுமன்றுக்குச் சென்றிருக்கிறார் ரெலோக் கட்சியின் தலைவர். அவரைத் தவிர அவரது கட்சி யின் மற்ற எல்லோரும் தோற்றுப் போய் விட்டார்கள்.

அவரது ஜனநாயகத் தமிழ்த் தேசி யக் கூட்டணியின் பிற பங்காளி கட்சிகள் எல்லாம் தோற்றுப் போனாலும் கூட, ரெலோவின் தலைவரின் வெற்றி அத் துணை ஒன்றும் பெரியது அல்ல, தொத் துப் பொறியியல் கிடைத்த வெற்றிதான் அது.

அந்த வெற்றியை வைத்துக் கொண்டு பங்காளிக் கட்சிகளை ஏளனப்படுத்துவது போல பேசுவதற்கு ரெலோவுக்கு பெரிய அருகதை எதுவும் கிடையாது.

மன்னாரில் பொருத்தமான கிறிஸ்தவ வேட்பாளரை தமிழரசு நியமிக்காததும், தன்னுடைய உட்கட்சி சண்டையில் தீவி ரமாக இருந்த தமிழரசின் மெத்தனமும், இப்படிக் கடைசிக் கந்தாயத்தில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை தேர்வுக்கு தந்திருக்கிறது. மற்றபடி இந்தத் தேர்த லில் தனது கூட்டணியின் ஏனைய பிற பங்காளி கட்சிகள் நான்குக்கும் சமதை யான பெறுபேறுகளைத்தான் ரெலோவும் பெற்றிருக்கின்றது.

தப்பித்தவறி, 2023 ஆம் ஆண்டுக் கான உள்ளூராட்சி தேர்தல் அச்சமயத் தில் நடந்திருந்தால் இப்படி பிளவுபட்டு நின்ற தங்களின் நிலைப்பாட்டின் பெறுபேறை அந்தத் தேர்தலிலேயே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி படித் திருக்கும்.

அந்தத் தேர்தல் நடைபெறாததால் இந்தப் படிப்பினை ரெலோ உட்பட்ட ஐந்து கட்சி கூட்டணிக்கு சுமார் ஒன்றரை வருடம் தாண்டிக் கிட்டி இருக்கிறது. அவ்வளவு தான்...!

## பேச்சு நடத்தத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிறைவடைந்துள்ளது. இந்தத் தேர் தலின் முடிவுகளை நாம் பார்க்கின்ற போது, தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு

பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அவர்கள் அடுத்துவரும் காலப்பகுதியில் புதிய அர சமைப்பை உருவாக்குவதற்கான செயற் பாடுகளை ஆரம்பிப்பார்கள் என்று எதிர் பார்க்கின்றோம்.

இந்தத் தருணத்தில் அவர்கள் ஏலவே மைத்திரி – ரணில், கூட்டாட்சி அரசில் முன் னெடுக்கப்பட்ட ஒற்றையாட்சியை மையப் படுத்திய புதிய அரசமைப்புக்கான இடைக் கால அறிக்கையில் இருந்து ஆரம்பிக் கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

குறித்த இடைக்கால அறிக்கையா னது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை. அது ஒற்றை யாட்சியை முழுமையாக ஏற்றுக்கொண் டுள்ள ஒன்றாகும். ஆகவே, குறித்த இடைக்கால அறிக்கையை தேசிய மக் கள் சக்தி அரசு முன்னெடுப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுவ தன் காரணமாக அவர்கள் எந்தவிதமான முடிவுகளுக்கும் செல்ல முடியும். ஆனால், தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறா கவே அவர்கள் செயற்படுகின்றார் கள் என்பதை வெளிப்படுத்த வேண் டும்.

அதற்காக, தமிழ் மக்களின் அபி லாஷைகளைப் பூர்த்தி செய்கின்ற வகை யில் தயாரிக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை யின் அரசியல் தீர்வுக்கான வரைவை அடிப்படையாக வைத்து ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

குறித்த வரைவு தயாரிக்கப்பட்டபோது சுமந்திரன்தவிர ஏனையகட்சிகள் அனைத் துப் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தார் கள். துரதிர்ஷ்டவசமாக தொடர்ச்சியாக அவர்களின் பங்கேற்பு முழுமை பெறும் வரையில் நீடித்திருக்கவில்லை.

எவ்வாறாயினும், கொள்கை அள வில் அனைவரும் தமிழ் மக்கள் பேர வையின் வரைவை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் அதனை மையப்படுத்தி பேச்சுக்களை ஆரம்பிப்பது பொருத்தமா னதாக இருக்கும். இந்தச் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கும் ஏனையவர்கள் அதில் பங்கேற்பதற்குமான பகிரங்க அறிவிப்பை நாம் விடுக்கின்றோம்.” – என்றார்.

## மாவீரர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் புதிய அரசின் கடற்றொழில் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் இராம லிங்கம் சந்திரசேகர், யாழ்ப்பாணத் தில் இருந்து ஒளிபரப்பாகும் தொலைக் காட்சி ஒன்றின் அரசியல் நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில், “மாவீரர் தினத்தை தமிழ் மக்கள் இம்முறை எந்தவிதமான கெடுபிடிக ளும் அடக்குமுறைகளும் இல்லாமல் அனுஷ்டிக்க முடியும். அதற்கு எந்த விதமான தடையும் கிடையாது.

மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்கும் மக்களை ஒளிப்படங்கள் எடுக்க வேண்டாம் என்றும் பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள் ளது.

எனவே, மக்கள் சுதந்திரமான முறை யில் மாவீரர் வாரத்தை அனுஷ்டிக்க முடியும். அது அவர்களின் உரிமை. அதற்கு அரசு தடை எதுவும் போடாது.” – என்றார்.

## வெள்ள அனர்த்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடி முக்கிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவை வருமாறு:–

1. வெள்ள அனர்த்தத்தால் பாதிக் கப்படக்கூடிய இடங்களை அடையா ளப்படுத்தி முன்னாயத்த நடவடிக்கை களை எடுத்தல்.

2. வெள்ள அனர்த்த ஆபத்து காரண மாக வதிவிடங்களை விட்டு வெளியே றும் மக்கள் தற்காலிக தங்குவதற் கான தங்குமிடங்களைத் தயார்படுத் தல்.

3. தற்காலிக தங்குமிடங்களில் தங் குவோருக்குச் சமைத்த உணவு வழங்க நடவடிக்கை எடுத்தல்.

4.மாவட்ட அனர்த்த முகாமைத்து வப் பிரிவின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளுதல்.

5.ஆபத்தான மரங்கள் அல்லது கிளைகள் ஏற்கனவே அகற்றப்பட்டதற்கு மேலதிகமாக, மேலும் இனங்காணப்பட்ட ஆபத்தான மரங்கள் அல்லது கிளை களை அகற்ற நடவடிக்கை எடுத்தல்.

6.ஆபத்தான பனை மரங்களை அகற் றுவதற்குச் சம்பந்தப்பட்ட பிரிவுக்குரிய பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்துக்கு எழுத்து மூலம் அறிவித்து அகற்ற அனுமதி வழங்கப் பட்டுள்ளதால் அதற்குரிய நடவடிக்கை களை எடுத்தல்.

மேலும் 24 மணி நேரம் இயங்கும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரி வின் தொலைபேசி இலக்கங்களுக்கு (0773957894 / 0212221676 / 0212117117 மற்றும் 117) பொதுமக்கள் அனர்த்தம் தொடர்பாக தகவல்களை வழங்குமாறும் அரச அதிபர் அறி வித்துள்ளார் என்று யாழ்ப்பாணம் மாவட்டசெயலகஊடகப்பிரிவுதெரிவித்துள் ளது.


## இந்திய மீனவர்களின் அத்துமீறலால் ஏற்படும்


# சொத்து இழப்பு தொடர்பில் அனலைதீவு மீனவர்களால் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு


(எஸ்.நிதர்ஷன்)

இந்திய மீனவர்களால் அனலைதீவு கடற்பரப்பில் கடற்றொழில் உபகரணங்கள் அழிக்கப்படுகின்றமை மற்றும் இழப்பீடுகள் ஏற்படுகின்றமை தொடர்பில் அனலைதீவு கடற்றொழிலாளர் சங்கம் மற்றும் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையம் என்பன இணைந்து ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்தன.

இந்த முறைப்பாட்டை அனலைதீவு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஜோன் பொஸ்கோ, வடக்கு மாகாணகடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா ஆகியோர் செய்தனர்.


அனலைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
ANALAITIVU FISHERMEN'S CO-OPERTIVE SOCIETY
173
ANALAITIVU


அனலைதீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
ANALAITIVU FISHERMEN'S CO-OPERTIVE SOCIETY
155
ANALAITIVU


Acknowledgement of Complaint
Police Station: ஊர்காவற்றுறை
Date: 24/11/2024
Name of Complainant: S. ஜோன் பொஸ்கோ
Nature of Complaint:
I. B. Reference: GIB 11 239/157
Signature of Recording Officer
Name Rank & Reg. No. of Recording Officer

# 468 கிலோ போதைப்பொருள்களுடன் 5 இலங்கையர்கள் மாலைதீவில் கைது

ஐஸ் மற்றும் கொக்கைன் போதைப்பொருள்களை ஏற்றிச் சென்ற இலங்கை இழுவை மீன்பிடிப் படகு ஒன்று மாலைதீவு கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

அந்தப் படகில் இருந்து 344 கிலோகிராம் ஐஸ் மற்றும் 124 கிலோகிராம் கொக்கைன் போதைப்பொருள்களுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்படையினர் வழங்கிய இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் 21 வயதுக்கும் 37 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும், திருகோணமலை மற்றும் தெய்வேந்திரமுனை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த போதைப்பொருள்கள் மாலைதீவுக்கு விற்பனைக்காகக் கொண்டு செல்லப்பட்டதா அல்லது மாலைத்தீவில் இருந்து வேறு நாடுகளுக்கு விற்பனைக்காகக் கொண்டு செல்லத் திட்டமிடப்பட்டதா? என விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2024

“தன்னால் அந்த மரத்தின் நிழலில் ஒருபோதும் உடக்ாரமுடியாது என்று தெரிந்தும் மரங்களை நாட்டும் முதியவர்களைக் கொண்ட சமூகம் மிகப் பாரியளவில் வளர்ச்சியடையும்.”

- கிரேக்கப் பழமொழி






# இந்த வருடத்திற்குள் மின் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவிப்பு

இலங்கை மின்சார சபையினால், மின் கட்டண திருத்தம் தொடர்பான பரிந்துரைகளை முன்வைப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக இந்த வருடத்திற்குள் மின் கட்டண திருத் தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் இந்தத் கருத்தை வெளியிட்டுள்ளார்

கடந்த செப்டம்பர் மாதம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவுக்கு, மின் கட்டண திருத்தம் தொடர்பான பரிந்து ரையொன்று இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக் கப்பட்டிருந்தது.

எனினும், முன்வைக்கப்பட்ட மின் கட்டண குறைப் புக்கான இந்த பரிந்துரை, போதுமானதாக இல்லை என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அறியப்படுத்தியிருந்தது.

அத்துடன், அவற்றை மீளாய்வுக்கு உட்படுத்தி நவம்பர் மாதம் 9ஆம் திகதிக்கு முன்னதாக மீண்டும் புதிய பரிந்துரை களை சமர்ப்பிக்குமாறு, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்குத் தெரியப்படுத்தியிருந்தது.

எனினும், மின் கட்டண திருத்தம் தொடர்பான பரிந்துரை களை சமர்ப்பிப்பதற்கு இலங்கை மின்சார சபை நவம்பர் மாதம் 22ஆம் திகதி வரை கால அவகாசம் கோரியிருந்தது.

இந்தநிலையில், மேற்படி பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு இலங்கை மின்சார சபை, மேலும் இரண்டு வாரங்கள் கால அவகாசம் கோரியுள்ளதாக இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனவே, இவ்வாறான பின்னணியில், மின் கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ளக் குறைந்தது 6 வாரங்களாவது தேவைப்படும் எனவும், அதற்கமைய இந்த வருடத்துக்குள் மின்கட்டண திருத்தத்தை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதாகவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# இலண்டனில் உணர்வுபூர்வமாக நடந்த தமிழீழத் தேசியக் கொடி நாள் நிகழ்வு!





மாவீரர் வாரத்தை முன்னிட்டு தமிழீழத் தேசியக் கொடி நாள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இலண்டனில் ஆயிரக் கணக்கானோரின் பங்குபற்றுதலுடன் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

புலம்பெயர் தமிழர்கள் ஒவ்வொரு ஆண்டும் தமது நாடுக ளில் தமிழீழத் தேசியக் கொடி நாள் நிகழ்வை அனுஷ்டித்து வருகின்றனர்.

இந்தத் தினத்தில் இறுதி யுத்தம் மற்றும் போர்க் காலத்தில் இலங்கையில் உயிர்த்த தமிழ் மக்களையும் நினைவுகூர்ந்து வருகின்றனர்.

அதன் பிரகாரம் இம்முறையும் தமிழீழத் தேசியக் கொடி நாள் நிகழ்வு இலண்டனில் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட தமிழ் மக்கள் இலங்கை யில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பில் நீதியான விசாரணை அவசியம் என்று வலியுறுத்தியதுடன், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதி சர்வதேச தலையீட்டுடன் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரினர்.

இலங்கையில் அமையப் பெற்றுள்ள புதிய அரசுக்கு ஐ.நா., மேற்கத்திய நாடுகள் உட்பட மனித உரிமைகளை நேசிக்கும் அனைத்து நாடுகளும் தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்குவதற்கான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் இந்த நிகழ்வில் கலந்துகொண்ட புலம்பெயர் தமிழர் கள் தெரிவித்தனர்.

இதேவேளை, போரில் உயிர்நீத்த உறவுகள் மற்றும் மாவீரர் களை நினைவுகூரும் நிகழ்வுகள் இவ்வாரம் முழுவதும் இலண்டனின் பல்வேறு பகுதிகளிலும், ஐரோப்பா, கனடா உட்பட பல புலம்பெயர் நாடுகளிலும் புலம்பெயர் தமிழர்க ளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தேர்தல் தந்த பாடம்

நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் பெறுபேறுகள் - அதில், வடக்கு - கிழக்கின் தமிழ்ப் பேசும் மக்கள் அளித்த தீர்ப்பு - தமிழ்க் கட்சிகளுக்கு, குறிப்பாகத் தமிழ்த் தேசியம் குறித்து அதிகம் குரல் எழுப்பும் கட்சிகளுக்கு, நல்ல பாடத்தை போதித்திருக்கின்றது என்பது தெளிவு.

தமக்குள் பிரிந்து நின்று தமிழ்த் தேசியத்தின் பெயரால் அக்கப்போர் நடத்துவது எத்துணை மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இந்தத் தேர்தல் நன்கு உணர்த்தி இருக்கின்றது என்பதை அவதானிகளும் விமர்சகர்களும் ஐயம் திரிபற ஏற்கனவே தெளிவாக எடுத்துரைத்து விட்டனர்.

நிலைமையின் விபரீதத்தை உணர்ந்து கொண்டுள்ள கட்சிகளின் தரப்பிலிருந்தும் மெல்ல மெல்ல ஒப்புதல் வாக்குமூலங்கள் வெளிவரத் தொடங்கி இருக்கின்றன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியை உருவாக்கிய கட்சிகள் நல்ல பாடம் படித்திருக்கின்றன.

மக்கள் ஆதரவு பெறாத கட்சிகளுடன் இனி கூட்டு வைப்பதா என்று அந்தக் கூட்டணியில் இருந்து ஒரேயொரு ஆசனத்தை மட்டும் வென்ற ரெலோ வெளிப்படையாகப் பேசப் புறப்பட்டிருக்கின்றது. அந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் மற்றைய கட்சிகளுக்கும் தங்களின் ஆதரவுத் தளத்தின் நீள, அகலம் இப்போது புரிய தொடங்கியிருக்கும் என்று நம்பலாம்.

தேர்தலில் பாடம் படித்துள்ள தமிழ் மக்கள் கூட்டணி இனிமேல் தனித்துப் போட்டியிடுவதில்லை என்று தீர்மானித்து, கூட்டணியாகச் சேர்ந்து போட்டியிடுவது பற்றி பேசத் தலைப்பட்டிருக்கின்றது.

இதுவரை காலமும் மற்றைய கட்சிகளுடன் இணக்கத்துக்கு அல்லது பேச்சுக்கு போக மறுத்து நின்று, தனித்துவம் உரைத்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி கூட, இப்போது அதிலிருந்து சற்று நழுவி வர தயாராகிக் காத்திருக்கின்றது. ஏனைய கட்சிகள் எல்லாம் 'தீட்டுப் பட்டவை', 'கரட் குறைந்தவை', தாங்கள் மட்டுமே சொக்கத்தங்கம் என்று நின்ற அக்கட்சியின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் இந்தத் தடவை வடக்கு, கிழக்குத் தாயகம், மற்றும் எங்கும் கிட்டிய வாக்குகள் உரிய பாடத்தை புகட்டி இருக்கும் என்று கருதலாம்.

தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்ட முன்மொழிவை அடிப்படையாக வைத்து ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்குத் தாங்கள் தயாராக இருக்கின்றனர் என இப்போது அவர் கூறியிருக்கிறார்.

இதுவரை காலமும் ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுடன் ஒரு மேசையிலிருந்து பேசுவது இழுக்கு என்ற மாதிரி ஒட்டாமல் நடந்து வந்த அவருக்கு, இந்தத் தேர்தல் முடிவு சில யதார்த்தமான பாடங்களை உணர்த்தி இருக்கின்றது என்று கருத முடியும்.

சரியோ, பிழையோ தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் தங்களுக்குள் மோதி, கொள்கைகள் பேசி, விதண்டாவாதம் பண்ணியதனால், இன்று தமிழர் தேசத்தின் மக்கள் ஆணை தென்னிலங்கைச் சிங்களக் கட்சியின் கைகளுக்குச் சென்று விட்டது.

இப்படி ஆகும் என்று பல தடவை எச்சரித்த போதும், ஏனைய தமிழ்த் தேசிய கட்சிகளுடன் கொள்கை ரீதியான உடன்பாட்டுக்குத் தன்னும் வர முடியாமல் பிடிச்சுராவித்தனத்தில் நின்ற தலைவர்கள் இப்போது யதார்த்தத்தை புரிய தொடங்கியிருக்கிறார்கள்.

எது, எப்படி என்றாலும் தமிழர் தரப்பில் தமிழரசுக் கட்சி தன்னுடைய நிலையை மீண்டும் ஸ்திரப்படுத்தியதன் மூலம், தான் தலைமைத்துவ கட்சி என்பதை உறுதிப்படுத்தி இருக்கின்றது.

தமிழர் பிரதேசத்தில் அதிக இடங்களை - எட்டு இடங்களை - அக்கட்சி பெற்றிருக்கின்றது. அது மட்டுமல்லாமல் தமிழர் பிரதேசத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதற்கு பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கின்றது. தமிழ் மக்களின் ஆணை அது. அதனை மற்றைய தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளும் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

மக்களின் தீர்ப்பை - தேர்தல் முடிவை - தமிழ் தேசிய கட்சிகள் ஏற்பதாயின், தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவுக்கு தலைமைக் கட்சியாக தொடர்ந்து இருக்க வேண்டியது - இதற்கு உரித்து உள்ளது - தமிழரசு கட்சியே என்பதை ஏற்றாக வேண்டும்.

இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு, தமிழ் தேசிய தரப்புகளை ஒன்றிணைக்கும் முயற்சிகளை முன்னெடுப்பது தவிர்க்க முடியாத கட்டாயமாகும்.

தமிழ்த் தேசிய கட்சிகள் இனியும் ஒன்றுபடுவதற்கு முரண்பட்டு நின்றால், அவை தமிழ் மக்களினால் அரசியல் குப்பை கூடைக்குள் நிரந்தரமாகத் தூக்கிக் கடாசப்படும் என்பதை இந்தக் கட்சிகள் புரிந்து கொண்டு செயல்படுவது அவசியமாகும்.

# பிஹாரில் நடைபெற்ற இடைத்தேர்தலில் பா.ஜ.க கூட்டணி 4 தொகுதிகளிலும் வெற்றி



பிஹாரில் நடைபெற்ற பேரவை இடைத்தேர்தலில் 4 தொகுதிகளிலும் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற்றுள்ளது.

பிஹார் மாநிலத்தில் டராரி, ராம்கர், இமாம்கஞ்ச் மற்றும் பெலாகஞ்ச் ஆகிய 4 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் நடைபெற்றது. இதில் பதிவான வாக்குகள் நேற்று முன்தினம் எண்ணப்பட்டன.

இதில், டராரி தொகுதியில் பா.ஜ.க. சார்பில் போட்டியிட்ட விஷால் பிரசாந்த் 78,755 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். சி.பி.ஐ-எம்.எல். வேட்பாளர் 68,143 வாக்குகளுடன் இரண் டாம் இடம் பிடித்தார்.

ராம்கர் தொகுதியில் பா.ஜ.க. சார்பில் போட்டியிட்ட அசோக் குமார் சிங் 1,362 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் போட்டியிட்ட சதிஷ் குமார் சிங் யாதவ் இரண்டாம் இடம் பிடித்தார்.

இமாம்கஞ்ச் தொகுதியில் பா.ஜ.க. கூட்டணி சார்பில் போட் டியிட்ட இந்துஸ்தான் அவாம் மோர்ச்சா (மதச்சார்பற்ற) தலைவர் ஜிதன் ராம் மாஞ்சி மருமகள் தீபா குமாரி 5,945 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். ஆர்ஜேடி சார்பில் போட்டி யிட்ட ரவுஷன் குமார் தோல்வி அடைந்தார்.

பெலாகஞ்ச் தொகுதியில் போட்டியிட்ட பா.ஜ.க. கூட்டணியில் உள்ள, ஐக்கிய ஜனதா தளம் கட்சி வேட்பாளர் மனோரமா தேவி 21,391 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். ஆர்.ஜே.டி. வேட்பாளர் விஸ்வநாத் குமார் இரண்டாம் இடம் பிடித்து தோல்வி அடைந்தார்.

# இந்த வெற்றியை உங்கள் வெற்றியாக உணரச் செய்வேன்: பிரியங்கா உறுதி



காலப்போக்கில் எனது இந்த வெற்றியை உண்மையில் உங்களின் வெற்றியாக உணரச் செய்வேன் என்று வயநாடு மக்களுக்கு காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி உறுதி அளித்துள்ளார்.

கேரளா வயநாடு மக்களவைத் தொகுதி காங்கிரஸ் வேட்பா ளர் பிரியங்கா காந்தி தனது முதல் தேர்தலில் சகோதரனின் சாதனையை முறியடித்துள்ளார். பல எதிர்பார்ப்புகளை மீறி அவர் வயநாட்டில் 4 லட்சத்து 10 ஆயிரத்து 931 வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றுள்ளார். இந்த நிலை யில் வயநாடு தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவித்து பிரி யங்கா காந்தி தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் குறிப்பிடுகையில்,

“எனது அன்புக்குரிய வயநாடு சகோதர, சகோதரிகளே! என் மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையால் நான் நன்றியில் மூழ்கித் திழைக்கிறேன்.

காலப்போக்கில் எனது இந்த வெற்றியை உண்மையில் உங்களின் வெற்றியாக நான் உணரச் செய்வேன். உங்களை பிரதிநிதித்துவப்படுத்த நீங்கள் தேர்ந்தெடுத்த நபர் உங்களின் நம்பிக்கைகளையும் கனவுகளையும் புரிந்து கொண்டவர், உங்களில் ஒருவராக உங்களுக்காக போராடுகிறார் என்பதை யும் உணரச் செய்வேன். நாடாளுமன்றத்தில் உங்களின் குரலாக ஒலிப்பேன். இந்த மரியாதையை நீங்கள் எனக்கு அளித்ததற்கும், நீங்கள் எனக்கு அளித்த அளவு இல்லாத அன்புக்கும் நன்றி.

ஐக்கிய இடது முன்னணியில் உள்ள எனது சகாக்கள், கேரளா முழுவதும் உள்ள தலைவர்கள், தொண்டர்கள், தன்னார் வலர்கள், இந்த பிரச்சாரத்தில் நம்பமுடியாத அளவுக்கு உழைத்த எனது அலுவலக சகாக்கள் அனைவரின் ஆதரவுக்கு நன்றி. நாளென்றுக்கு 12 மணி நேர (உணவு தூக்கம் இல்லா மல்) கார் பயணம் என்ற எனது அழுத்தத்தை, நாம் நம்பும் ஒரு சித்தாந்ததுக்காக உண்மையான வீரர்களைப் போல போராடியதற்காகவும் நன்றி. ” என்று குறிப்பிட்டுள்ளார்.






# 48 மணித்தியாலங்களில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் 120 பாலஸ்தீனியர்கள் பலி

கடந்த48மணிநேரத்தில்இஸ்ரேல்நடத்தியவான்வழித்தாக்குதலில் 120 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் நேற்று மாலை செய்தி வெளியிட்டன.

இதன்போது, காசாவின் ஜெய்டவுன் புறநகர்ப் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் கொல்லப்பட்டனர். மத்திய காசா மற்றும் தெற்கு காசா மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஏனையோர் பலியாகியுள்ளனர்.

அத்துடன், வடக்கு முனையில் உள்ள மருத்துவமனையின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மருத்துவ ஊழியர்கள் படுகாயமடைந்தனர். முக்கிய மருத்துவ உபகரணங்களும் சேதமடைந்துள்ளன.

இதேவேளை, வடக்குப் பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இஸ்ரேலிய பெண் பணயக் கைதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் என ஹமாஸ் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை எதிர்த்து கடந்த வருடம் ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் அதிரடியாக நுழைந்து ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர்.

அதேநேரம், 200 பேர் வரை பணயக் கைதிகளாக அழைத்துச்செல்லப்பட்டனர். அதில் 117 பேரை இஸ்ரேல் உயிருடன் மீட்டுள்ளது.


இதற்கிடையே இந்த திடீர் தாக்குதலால் கோபமடைந்த இஸ்ரேல் கடந்த 13 மாதங்களாக பாலஸ்தீனிய நகரங்கள் மேல் தாக்குதல் நடத்தி 44 ஆயிரம் பேரை கொலை செய்துள்ளது.

அவ்வாறு கொல்லப்பட்டவர்களில் 70 சதவீதமானவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று ஐ.நா அறிக்கை கூறியுள்ளது.









# ஜோர்தானில் இஸ்ரேலிய தூதரகம் அருகில் துப்பாக்கிச் சூடு: பொலிஸார் மூவர் படுகாயம்

ஜோர்தானில் உள்ள இஸ்ரேலிய தூதரகத்திற்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தச் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நேற்று காலை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில், துப்பாக்கிதாரி உயிரிழந்துள்ளார். மூன்று பொலிஸார் காயமடைந்துள்ளனர் என ஜோர்தான் பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் அம்மானின் ரபியா பகுதியில் ரோந்து நடவடிக் கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது துப்பாக்கிதாரிகள் தாக்குதலை மேற்கொண்டனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸார் உடனடியாக செயல்பட்டு பதில் தாக்குதலை மேற்கொண்டு துப்பாக்கிதாரி ஒருவரைச் சுட்டுக் கொன்றுள் ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன், துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தை அடுத்து இஸ்ரேலிய தூதரகத்திற்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடைபெற்ற பகுதியில் இஸ்ரேலுக்கு எதிராக அடிக்கடி ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன என தெரிவிக் கப்பட்டுள்ளது.

காசாவில் நடைபெற்ற போரில் இஸ்ரேலுக்கு எதிரான உணர்வு அதிகமாக இருப்பதனால், பிராந்தியம் முழுவதும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகள் இடம்பெற்று வருகின்றன.

ஏனைய துப்பாக்கிதாரிகளை தேடும் பணியில், பொலி ஸார் ஈடுபட்டுள்ள நிலையில், குடியிருப்பாளர்களை வீடுக ளில் இருக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.













# அம்பாறை மாவட்டத்தில் விபத்துகளில் உயிரிழந்த இருவரின் சடலங்கள் உறவினர்களிடம் கையளிப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தின் இரு வேறு இடங்களில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்முனை – அக்கரைப்பற்று பிரதான வீதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் சம்பவ இடத்தில் உயிரிழந்திருந்தார். வேகமாக நண்பர்களுடன் மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்ற நிலையில் அம்மாணவன் கனரக வாகனம் ஒன்றுடன் மோதுண்டு அந்த இடத்திலேயே உயிரிழந்திருந்தார். உயிரிழந்தவர் நிந்தவூர் அல் அஸ்ரக் தேசிய பாடசாலையில் உயர்தர பிரிவில் கல்வி கற்கும் 18 வயதுடைய பாரூக் முஹம்மது சீத் என அடையாளம் காணப்பட்டார். இவரது சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு திடீர் மரண விசாரணை இடம்பெற்று உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டது. இது தவிர சடலத்தின் பாகங்கள் மேலதிக விசாரணைக்காக அரச பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இது தவிர சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீரமுனை பகுதியில் கடந்த வியாழக்கிழமை மாலை மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த 23 வயது மதிக்கத்தக்க மதன் பவி லக்ஷான் என்ற இளைஞன் வீதியில் சென்ற மாடு ஒன்றுடன் மோதலை தவிர்ப்பதற்காக மோட்டார் சைக்கிளை வெட்டித் திருப்பிய போது அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதி படு காயமடைந்தார். பின்னர் சிகிச்சைக்காக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அங்கு உயிரிழந்திருந்தார். கிராம சேவகரது மகனான இவ்விளைஞன் வீடு திரும்பும் வழியில் இந்த விபத்திற்கு முகம் கொடுத்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சடலத்தை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் பார்வையிட்டு மரண விசாரணை மேற்கொண்டமையுடன் உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார். பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் கடந்த சில தினங்களாக அம்பாறை மாவட்டத்தில் அதிகளவான விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தாவரங்களை அடையாளம் காணுகின்ற தாவராவதானி போட்டி நாளை நல்லூரில்

வட மாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுத் தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் நடாத்தும் தாவரங்களை அடையாளம் காணுகின்ற தாவராவதானி போட்டி நாளை செவ்வாய்க்கிழமை நல்லூர் திவ்ஜ ஜீவன சங்க மண்டபத்தில் காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது.

இயற்கை எனது நண்பன் என்ற பிரசித்தமான மேற்கோளுக்கு அமைவாக தாவரங்களை அடையாளம் காண்பதன் மூலம் தாவரங்களையும் இயற்கையையும் நேசிக்கக் கற்றுத் தருவதை நோக்காகக் கொண்டு இப்போட்டி ஒழுங்கமைக்கப்படுள்ளது.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் ஆண்டுதோறும் நடாத்தப்படும் இப்போட்டியில் பால், வயது வேறுபாடின்றி எவரும் பங்கு கொள்ளலாம். முன் பதிவு இல்லாமல் இப்போட்டியில் நேரடியாகக் கலந்து கொள்ள முடியும்.

வெற்றியாளர்களுக்குச் சான்றிதழ்களோடு பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

– இவ்வாறு தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்படுள்ளது.





# மாவீரர்களின் பெற்றோருக்கு சம்பூரில் நேற்று கௌரவம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களை மதிப்பளித்து கௌரவிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை சம்பூர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இதனை சம்பூர் - ஆலங்குளம் மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு ஒழுங்கு செய்திருந்தது.

நிகழ்வின் ஆரம்பத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் மலர் தூவி விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டனர். இதனை தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்களினால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு உயிர்நீத்த உறவுகளுக்காக மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 350 மாவீரர்களின் பெற்றோர்களுக்கு தென்னைமரக் கன்றுகள் வழங்கப்பட்டிருந்தன. அத்தோடு அவர்களது குடும்பங்களுக்கான மதியபோசனமும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன், மாவீரர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.









# மழையுடனான வானிலையால் 15 ஆயிரத்து 622 பேர் பாதிப்பு



கடந்த ஒருவார காலப்பகுதிக்குள் கடும் காற்று மற்றும் பலத்த மழையுடனான வானிலையால் 4,184 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 622 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

05 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அதிகளவிலானோர் மன்னார் மாவட்டத்திலேயே பாதிக்கப்பட்டுள்ளனர். அந்த மாவட்டத்தில் 7,854 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 399 பேர் 05 பாதுகாப்பு மத்திய நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

5 மாவட்டங்களிலும் 44 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.



# பசறை – லுணுகலை 13 ஆம் கட்டை பகுதியில் பசறை நோக்கி பயணிக்கும் பகுதி திறப்பு

மண்சரிவு காரணமாக மூடப்பட்டிருந்த பசறை – லுணுகலை மார்க்கத்தின் 13ஆம் கட்டை பகுதியில் பசறை நோக்கி பயணிக்கும் பகுதி நேற்று மாலை 06 மணி வரை திறந்திருக்கும் என பதுளை மாவட்ட செயலாளர் பிரபாத் அபேவர்தன தெரிவித்திருந்தார்.

இன்று முதல் மறு அறிவித்தல் வரை காலை 06.30 முதல் மாலை 06 மணி வரை குறித்த வீதியை திறப்பது தொடர்பில் தொழில்நுட்ப மதிப்பீடுகளின் பின்னர் தீர்மானிக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதனிடையே, மேற்படி வீதியை பயன்படுத்து உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு பதுளை மாவட்டச் செயலாளர் அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளார்.



# வங்காள விரிகுடாவில் வலுவடையும் தாழமுக்கம்

## வட, கிழக்கு மாகாணங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு கடற்பிராந்தியத்தில் உருவாகியுள்ள தாழமுக்கமானது இன்று வலுவடைந்து நாட்டின் வடக்கு கடற்பிராந்தியம் நோக்கி நகரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதனால் நாட்டின் கிழக்கு மாகாணத்தின் சில பிரதேசங்களில் 150 மில்லி மீற்றர் வரையிலான பலத்த மழை பெய்யுமென திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அத்துடன், இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் சிவப்பு எச்சரிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

மன்னார் முதல் காங்கேசன்துறை, திருகொணமலை, மட்டக்களப்பு, பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையிலான கடற்பிராந்தியத்தில் மணித்தியாலத்திற்கு 60 முதல் 70 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

# குளவிக் கொட்டுக்கு இலக்கான ஏழு பேர் வைத்தியசாலையில்



பொகவந்தலாவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெரேசியா தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகிய 7 பேர் பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேயிலை மலையில் பறித்துக் கொண்டிருந்த பெண் தோட்டத் தொழிலாளர்கள் 7 பேர் நேற்று முன்தினம் மாலை குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

அவர்கள் 7 பேரில் இருவர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளதாகவும் ஏனைய ஐவரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என வைத்தியசாலையின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# அரச கடன் முகாமைத்துவ சட்டத்தை அமுல்படுத்தி

## அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

அரச கடன் முகாமைத்துவ சட்டத்தை இன்று முதல் அமுல்படுத்தி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.




அரச கடன் முகாமைத்துவ சட்டமூலம் கடந்த ஜூன் மாதம் 7ஆம் திகதி திருத்தங்களுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அரசு சார்பில் கடன் பெறுதல், கடன் வழங்குதல் மற்றும் பொதுக்கடன் வழங்குதல், கடன் முகாமைத்துவ அலுவலகம் அமைத்தல் ஆகிய பணிகள் இந்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 25.11.2024




இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை. இன்று சிலவிதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். தேவையற்ற செலவுகளின் கவலையும் இன்று காணப்படும்.

இன்று வயிறு உப்பச பாதிப்பு ஏற்படலாம். காரமான மற்றும் எண்ணெய் பதார்த்தங்களை தவிர்ப்பது நல்லது.




உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கும் சேமிப்பதற்கும் பணம் கிடைக்கும் அதிர்ஷ்டம் இன்று காணப்படுகின்றது.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவு-களை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரனையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது . இதனை நீங்கள் ஆன்மீக காரியங்களுக்கு பயன்படுத்தலாம்.

இன்று நீங்கள் ஆற்றலுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள்.




இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மன நிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள்.

இன்று பதற்றம் காணப்படும். ஆரோக்கியமாய் இருக்க தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று விருப்பமான பலன்கள் கிடைப்பது அரிது. உங்கள் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச தயங்குவீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அடிப்படை தேவைகளை சமாளிப்பதும் நிதிநிலையை சமாளிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.




இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள். இது உங்கள் நிதிநிலையை மேம்படுத்தும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்பஉங்களைமாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று உங்கள் செயல்களை நேர்மையாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடுநிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்களுக்கெதிரான சூழ்நிலை ஏற்படலாம். இன்று அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைகாது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம். மகிழ்ச்சியாக இருக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று பண வரவு காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் - 25.11.2024




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. ஆன்மீக நோக்கத்திற் காண பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். பணியிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணை யுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவரின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று அமைதி காணப்படும். இன் றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப் பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப் படும்.

உங்கள் துணையுடன் அன்பாகவும் அனுசரணை யாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப் பாக இருக்கும்.




இன்று உற்சாகமான நாளாக இருக்கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். இன்று உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படு கின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிப்பீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் திடமாகவும் ஸ்திரமாகவும் இருக்கும். மன வருத்தங்கள் ஏதும் இல்லாமல் இன்று திருப்தியான உணர்வுடன் இருப்பீர்கள்.




உங்கள் அணுகுமுறையில் யதார்த்த மும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்க ளுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்பு கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசு வதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

